செ.வெ.எண் : 15/ ஜூலை நாள் : 07.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## கோவில் பாதுகாப்பு காலிப்பணியிடங்களுக்கு 62 வயதிற்குட்பட்ட முன்னாள் படைவீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

காலியாகவுள்ள கோவில் பாதுகாப்பு பணிக்கு 62 வயதிற்குட்பட்ட முன்னாள் படைவீரர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

கோவில் பாதுகாப்பு பணிக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் 21 பணியிடங்கள் காலியாக உள்ளன. காலியாக உள்ள இடங்களில் சேர விரும்பும் 62 வயதுக்கு உட்பட்ட முன்னாள் படைவீரர்கள் தங்களது அசல் படைவிலகல் சான்றுடன் இராமநாதபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (தொலைபேசி எண்.-04567-230045)-ஐ தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம். மாத சம்பளம் ரூ.5000/- வழங்கப்படும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**